www.Padasalai.Net www.CBSEtips.in

A

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: [ ]

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்வு செய்க: 20×1=20

1. ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.
   அ) நாடுகளின் செல்வம் ஆ) பொது கோட்பாடு
   இ) மூலதனம் ஈ) பொது நிதி
2. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ________ ஆகும்.
   அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா
3. மூன்றாம் துறை ________ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) பணிகள் ஆ) வருமானம் இ) தொழில் ஈ) உற்பத்தி
4. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ________
   அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
   இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி முதல் டிசம்பர் 31
5. மொத்த அளிப்பு சமம்
   அ) C + I + G ஆ) C + S + G + (X – M)
   இ) C + S + T + (X – M) ஈ) C + S + T + Rf
6. தொன்மைக் கோட்பாடு ________ ஐ ஆதரிக்கிறது.
   அ) சமநிலை வரவு செலவு ஆ) சமமற்ற வரவு செலவு
   இ) உபரி வரவு செலவு ஈ) பற்றாக்குறை வரவு செலவு
7. குறைவான வட்டி வீதம்
   அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
   இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
8. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது.
   அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1
9. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
   அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914
10. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது
    அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
    இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு
11. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
    அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு
    இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12. ஏற்றுமதி - இறக்குமதி வங்கி துவக்கப்பட்டது?

அ) ஜுன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே 1982 ஈ) மார்ச் 1982

13. ஏற்றுமதி நிகரம் என்பது

அ) ஏற்றுமதி × இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி

இ) ஏற்றுமதி – இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி

14. அயல்நாட்டுச் செலுத்து நிலை உள்ளடக்கிய இனங்கள் ________

அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள் மட்டும்

இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிபம் மட்டும்

15. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்

அ) தாள் தங்கம் ஆ) பங்களவுகள்

இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இவை ஏதுமில்லை

16. ஆசியான் விவாதத்தில் பங்கேற்கும் 6, நாடுகளில் சேராத நாடு

அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) வடகொரியா

17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருள் மாறாது நிலையாக இருப்பது

அ) இருப்பு ஆ) ஓட்டம்

இ) இருப்பு & ஓட்டம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

18. வேலையற்றோருக்கு அரசு அளிக்கும் உதவித் தொகை ________

அ) செலவு ஆ) வரவு இ) மாற்றுச்செலுத்துதல் ஈ) அனைத்தும்

19. பெருக்கி மற்றும் முடுக்கியின் மொத்த விளைவு ________

அ) பெருக்கி ஆ) மேம்பட்ட பெருக்கி

இ) முடுக்கி ஈ) இவை அனைத்தும்

20. $M_1$ மற்றும் $M_2$ ஆகிய இரண்டும் சேர்ந்தது ________

அ) குறுகிய பணம் ஆ) பரந்த நிலை பணம்

இ) பணச்சுழற்சி ஈ) இவற்றில் எதுவுமில்லை

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.
வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×2=14

21. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.

22. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" - வரையறு.

23. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?

24. சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.

25. முடுக்கி - வரையறு.

26. பொன்திட்டம் என்றால் என்ன?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



27. மைய வங்கி என்பதனை வரையறு.
28. வாணிப வீதத்தினை விளக்குக.
29. ஆசியாவின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக.
30. செலவாணி விகிதம் என்றால் என்ன?

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.
வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×3=21

31. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக.
33. செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
34. தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.
35. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
36. தேவை - இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.
37. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
38. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
39. சார்க்கின் பணிகளை சுருக்குக.
40. வணிக வங்கிகளின் இரண்டாம் நிலைப் பணிகள் எழுதுக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7×5=35

41. அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

(அல்லது)

ஆ) முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

42. அ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

(அல்லது)

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

43. அ) கீழ்காணுபவற்றை சுருக்கமாக எழுதுக:
அ) பருவ கால வேலையின்மை
ஆ) உடன்பாடில்லா வேலையின்மை
இ) படித்தவர் வேலையின்மை

(அல்லது)

ஆ) ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



44. அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

(அல்லது)

ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும், முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

45. அ) பணத்தின் பணிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

46. அ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக.

47. அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்மிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) குறிப்பு எழுதுக :

அ) சார்க்

ஆ) ப்ரிக்ஸ்

------------



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

12

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023
## வேலூர் மாவட்டம்
## பொருளியல்
## விடைக் குறிப்புகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **20 x 1 = 20**

1. (ஆ) பொதுக் கோட்பாடு
2. (ஆ) அமெரிக்கா
3. (அ) பணிகள்
4. (அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31
5. (ஈ) C+S+T+Rf
6. (அ) சமநிலை வரவு செலவு
7. (ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
8. (அ) 1
9. (இ) 1911
10. (ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
11. (ஈ) இந்திய ரிசர்வ் வங்கி
12. (ஈ) மார்ச் 1982
13. (இ) ஏற்றுமதி - இறக்குமதி
14. (இ) அ மற்றும் ஆ
15. (அ) தாள் தங்கம்
16. (ஈ) வட கொரியா
17. (அ) இருப்பு
18. (இ) மாற்று செலுத்துதல்
19. (ஈ) இவை அனைத்தும்
20. (அ) குறுகிய பணம்

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்)** **7 x 2 = 14**

21. பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

22. ஒரு பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.

23. விவசாயிகள் தங்களின் சுயநலத்திற்காக உற்பத்திப் பொருளை ஒதுக்கி வைக்கின்றனர். விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

24.
1. முழு வேலை நிலை நிலவுகிறது.
2. உழைப்பு மற்றும் பண்டங்கள் சந்தையில் நிறைவு போட்டி நிலவுகிறது.
3. கூலி மற்றும் விலையில் நெகிழ்வு தன்மை உண்டு
4. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்
5. அரசின் செயல்பாடுகள் ஏதும் இல்லை.

25. "தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே உள்ள விகிதம் " **கே. கே. குரிஹாரா**

26. ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பண அலகின் வாங்கும் திறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

27. "மைய வங்கியானது வங்கிகளின் வாங்கியாகும். மேலும் நாட்டின் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதும் மீப்பெரு மதிப்பு பணத்தை கொண்ட அமைப்பு" **பி. ஏ. சாமுவேல்சன்**

28. ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்கும் இடையே உள்ள விகிதமே வாணிப வீதம் எனலாம்.

29.
1. பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சியை துரிதப்படுத்துவது.
2. கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு தகுந்த வசதிகளை உறுப்பு நாடுகளில் அமைத்து கொடுப்பது.

30. ஓர் அலகு அயல்நாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பதே பண மாற்று வீதம் ஆகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்)** **7 x 3 = 21**

31. **1. சொத்து, உற்பத்தி சாதனங்களின் உரிமம் :** உற்பத்தி சாதனங்களும் சொத்துக்களும் தனியார் மற்றும் பொதுத் துறைக்கு சொந்தமாக இருக்கும்.
**2. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருத்தல் :** தனியார்துறை இலாப நோக்கத்திற்காகவும், பொதுத்துறை சமூக நலனை மேம்படுத்தவும் செயல்படுகிறது.
**3.பொருளாதார திட்டமிடல் :** அரசின் திட்டங்களை தனியார் துறையும், பொதுத்துறையும் மதித்துப் பின்பற்றும்.

32. 1. ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
2. தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம்.
3. தலா வருமானத்தை தலை வீத வருமானம் என்றும் அழைக்கலாம்.

33. 1. செலவு முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
2. மொத்த செலவு கீழ்க்கண்ட சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.
GNP=C+I+G+(X-M)

34. ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே தேவை எனப்படும். அதன் கூறுகள்
1. c = நுகர்வுத் தேவை 2. 1 = முதலீட்டுத் தேவை 3. G அரசு செலவு 4. X-M = நிகர ஏற்றுமதி
AD=C+I+G+(X-M)

35.

| **தன்னிச்சையான முதலீடு** | **தூண்டப்படுகின்ற முதலீடு** |
|---|---|
| 1. தன்னிச்சையானது. | 1.திட்டமிடப்பட்டது. |
| 2. பொருளாதார மந்தகாலத்தில் அரசால் மேற்கொள்ளுவது. | 2. பொருளாதார வளர்ச்சி காலத்தில் தனியாரால் |
| 3. சமூக நோக்கம் உடையது. | 3. இலாப நோக்கம் உடையது. |
| 4. வருவாய் நெகிழ்ச்சியற்றது. | 4. வருவாய் நெகிழ்ச்சி உள்ளது. |

36. **1. தேவை இழுப்பு பணவீக்கம்:** பொருட்களுக்கான அளிப்பு நிலையாக இருந்து தேவை அதிகரித்தால் விலைவாசி உயரும்.
**2. செலவு உந்து பணவீக்கம்:** உற்பத்தியில் மூலப்பொருட்களின் செலவு உயரும் பொழுது பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.

37. 1. கருப்புப் பணத்தை ஒழிப்பது.
2. இலஞ்சத்தை தடுப்பது.
3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது.
4. கள்ள பணத்தினை தடுப்பது.

38. 1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிகப் பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

39. 1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்.
2. பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.
3.உறுப்பினர் நாடுகளுக்கு இடையிலான உறவை மேம்படுத்துதல்.
4. ஏழ்மையை ஒழிப்பது.
5. பயங்கரவாத செயல்களை தடுப்பது.

40. **அ) முகமைப் பணிகள்**
1. காசோலைகளை பணமாக்குதல்.
2. வருமானத்தை பெறுதல்.
3. செலவுகளை செலுத்துகிறது.

**ஆ) பொதுப் பயன்பாட்டு பணிகள்**
1. பாதுகாப்பு பெட்டக வசதி.
2. பயணக் காசோலை வழங்குதல்.
3. அந்நிய செலாவணியை கையாளுதல்.
4. கடன் உறுதியளிப்பு கடிதம்.
5. பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல். 6. மின்னணு வங்கி

www.Padasalai.Net

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 x 5 = 35**

**41. (அ.)**

**1. தேசிய வருவாய்:** தேசிய வருவாய் கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுப்பாய்வின் அடிப்படை அம்சங்கள் ஆகும்.

**2. பணவீக்கம்:** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

**3. வாணிப சுழற்சி:** மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**4. வறுமை மற்றும் வேலையின்மை:** வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளியல் உதவுகிறது.

**5.பொருளாதார வளர்ச்சி:** பேரியல் பகுப்பாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

**(ஆ.)**

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 6 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| 7 | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**42. (அ.)**

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம் பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறையின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
2. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.
4. குறுகிய கால மற்றும் நீண்டகால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.
5. ஒரு நாட்டின் வருமானத்தை மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும் தேசிய வருவாய் விபரங்கள் பயன்படுகின்றன.

**(ஆ.)**

**தேசிய வருவாய் :** ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஒரு குறிப்பிட்ட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பே தேசிய வருவாய் எனப்படும்.

**1. உற்பத்தி முறை :** ஒரு நாட்டின் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளில் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**2. வருவாய் முறை :** உற்பத்தி நிலைகளில் உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

**3.செலவு முறை :** ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

**GNP=C+I+G+(X-M)**

C - தனியார் நுகர்வு செலவு 1 - தனியார் முதலீட்டு செலவு

G - அரசின் கொள்முதல் செலவு (X-M)- நிகர ஏற்றுமதி

**43. (அ.)**

**1. பருவகால வேலையின்மை :** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். எ.கா.விவசாயம்.


**2.உடன்பாடில்லா வேலையின்மை :** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லாத வேலையின்மை ஏற்படுகிறது.

**3. படித்தவர் வேலையின்மை :** சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.

**(ஆ.)**

1. கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் ADF மற்றும் ASF சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
2. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.

**வரைபடம்**




**வரைபட விளக்கம்**

1. தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு "E" என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது.
2. E என்ற புள்ளியில் வேலைவாய்ப்பு $N_0$ஆக இருக்கும்.
3. $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு தேவை அதிகமாக இருக்கும். ஆனால் தொகு அளிப்பு குறைவாக இருக்கும். இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்.
4. சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவார்.
5. வரைபடத்தில் N. மற்றும் $N_f$ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மைய காட்டுகிறது.

**44. (அ.)**

**கீன்ஸின் உளவியல் விதி.**

கீன்ஸ் உளவியல் அடிப்படையில் இவ்விதியை உருவாக்கினார். நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதிகரிக்கும். ஆனால் வருமானம் உயர்ந்த அளவிற்கு நுகர்வு அதிகரிக்காது.


**அனுமானம்**

1. மற்றவை மாறாது.
2. சுமூகமான சூழல் இருக்கும்.
3. முதலாளித்துவத்தில் தடையில்லா கொள்கை பின்பற்றப்படுகிறது.

**விதியின் கருத்துக்கள்**

1. வருமானம் உயரும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.
2. அதிகரித்த வருமானம், நுகர்வுக்கும் சேமிப்புக்கும் இடையே பிரிக்கப்படுகிறது.
3. வருமானம் உயரும்போது சேமிப்பு, நுகர்வு இரண்டும் அதிகரிக்கும்.

**வரைபடம்**




**வரைபட விளக்கம்**

1. வரைபடத்தில் வருமானம் 120 இல் இருந்து 180 ஆக அதிகரிக்கும்போது நுகர்வு 120 இல் இருந்து 170 ஆக அதிகரிக்கின்றது. ஆனால் அதிகரித்த நுகர்வு அதிகரித்த வருமானத்தை காட்டிலும் 10 குறைவு.சேமிக்கப்படுகிறது
2. வருமானம் 180 விருந்து 240 ஆக அதிகரிக்கும்போது நுகர்வு 170 விருந்து 220 ஆகவும் சேமிப்பு 10 விருந்து 20 ஆகவும் அதிகரிக்கிறது.

**(ஆ.)**

| வ. எண் | மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEI) |
|---|---|---|
| 1 | இது மூலதனத்தின் அளிப்பு விலையை பொறுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது |
| 2 | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்கு பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தை காட்டுகிறது. |
| 3 | வரைப்படத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது |
| 4 | இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock). | இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு. |


| | | |
|---|---|---|
| 5 | ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில் ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**45. (அ.)**

1.பணம் ஒரு பரிவர்தனை கருவி.
2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.
3. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன்.
4. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை.
5. கடன் முறைக்கு அடிப்படை.
6. தேசிய வருவாயை பகிர்ந்தளிக்க உதவுகிறது.
7. இறுதிநிலை பயன்பாடுகளை ஒப்பிட பணம் பயன்படுகிறது.
8. திரும்ப செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது.
9. பணம் வாங்கும் திறனை குறிக்கிறது.

**(ஆ.)**

1. பூரிப்பு : அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.
2. பின்னிறக்கம் : பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.
3. மந்தம்: மிக மோசமான கட்டம். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் தேக்கமடையச் செய்யும்.
4. மீட்சி : அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.




**46. (அ.)**

**I. முதன்மைப் பணிகள்**

அ.) வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.

(i) கேட்பு வைப்புகள்: எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தை பெறலாம்.
1. சேமிப்பு கணக்கு
2. நடப்பு கணக்கு

(ii) கால வைப்புகள்: குறிப்பிட்ட காலம் பெறமுடியாது. கூடுதல் வட்டி வழங்கப்படும்.
1.நிலை வைப்பு
2. தொடர் வைப்பு

ஆ) கடன் வழங்கல்: ரொக்க கடன், மாற்றுச்சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று.

**II. இரண்டாம் நிலை பணிகள்**

(அ ) முகமைப் பணிகள் :
1. காசோலைகளை பணமாக்குதல்.
2. வருமானத்தை பெறுதல்.
3. செலவுகளை செலுத்துகிறது.

ஆ) பொதுப் பயன்பாட்டு பணிகள்:
1. பாதுகாப்பு பெட்டக வசதி.
2. பயணக் காசோலை வழங்குதல்.
3. அந்நிய செலாவணியை கையாளுதல்.
4. கடன் உறுதியளிப்பு கடிதம்.
5. பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்.
6. மின்னணு வங்கி

**III. இதர பணிகள் :**
1. பண அளிப்பு
2. கடன் உருவாக்கம்
3. புள்ளி விபரங்களை திரட்டுதல்.

www.Padasalai.Net

**(ஆ.)**

**1. *பண அதிகார அமைப்பு* :** *வங்கி அமைப்பை நிலைப்படுத்துகிறது.*

**2. *காகிதப் பண வெளியீடு* :** *இது காகித பணத்தை அச்சிட்டு வெளியிடும் உரிமை பெற்றது.*

**3. *அரசுக்கான வங்கி* :** *இது மத்திய மாநில அரசுகளுக்கான வங்கியாகும்.*

**4. *வங்கிகளின் வங்கி* :** *அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.*

**5. *கடன் வழங்குவதில் கடைசி புகலிடம்* :** *வணிக வங்கிகளுக்கு நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது கடனை வழங்கி உதவுகிறது.*

**6. *அந்நியச் செலாவணியின் பாதுகாவலர்*:** *வெளிநாட்டு பண இருப்புகளை பாதுகாக்கும் பணியினை செய்கிறது.*

7. *பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது.*

8. *பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது.*

**47. (*அ.*)**

| ***உள்நாட்டு வாணிபம்*** | ***பன்னாட்டு வாணிபம்*** |
|---|---|
| 1. *ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வாணிபம்.*<br>2. *பொருட்கள் மற்றும் பணிகள் இடம்பெயர்தல் தடை ஏதுமில்லை*<br>3. *ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.*<br>4. *புவி அமைப்பு மற்றும் காலநிலை ஒரே மாதிரி இருக்கும்*<br>5. *உழைப்பு மற்றும் மூலதனம் தடையில்லாமல் இடம்பெயரும்.* | 1. *பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம்*<br>2. *சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் உண்டு*<br>3. *பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது*<br>4. *புவி அமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும்.*<br>5. *உழைப்பு, மூலதனம் இடம்பெயர தடை* |

**(ஆ.)**

***அ.) சார்க்* (SAARC)**

1. *தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவங்கப்பட்ட அமைப்பு சார்க் ஆகும்.*

2. *டிசம்பர்* 8, 1985-*ல் அமைக்கப்பட்டது. ஜனவரி* 16. 1987-*ல் நேபாள தலைநகர் காத்மாண்டுவை தலைமைச் செயலகமாகக் கொண்டு செயல்படத் துவங்கியது.*

3.*வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய* 7 *நாடு உறுப்பு நாடுகளாகும்.*

***ஆ.) பிரிக்ஸ்* ( BRICS )**

1. *வேகமாக வளர்ந்து வரும்* 5 *நாடுகளின் முதல் எழுத்துக்களின் சுருக்கப் பெயர் பிரிக்ஸ்* (BRICS).

(a) *பிரேசில்* (b) *ரஷ்யா* (C.) *இந்தியா* (d.) *சீனா* (e.) *தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள்.*

2. *சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸ்-ன் தலைமை அலுவலகம் செயல்படுகிறது.*

3. *வணிக ஒத்துழைப்பை மேம்படுத்துதல் வளரும் நாடுகளைக்கென தனியான பன்னாட்டு அமைப்பை உருவாக்குவது. பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி தொடங்கப்பட்டது. வளரும் நாடுகளில் அமைதி மற்றும் பாதுகாப்பு இதன் முக்கிய செயல்பாடாகும்.*

*PREPARED BY*

**கு. சுதாகர்** **அரசினர் மேல்நிலைப் பள்ளி, பனமடங்கி.**

**சி. சுதாகர்** **அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஊசூர்.**

www.Padasalai.Net